1992 மார்ச் 16] [பேரவைத் தலைவர்]

zero hour என்று எந்த விதி இருக்கிறது, இந்த விதி226-இல் speaker may suo moto refer என்றுதான் இருக்கிறது. அது, speaker-க்கு இருக்கிற அதிகாரம், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்,

மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. zero hour என்பது ஒரு convention தானே தவிர, அது விதி இல்லை, "Parliamentary Rules of Procedure and also Rules of Procedure in the Legislative Assembly" இவற்றைப் படித்துப் பார்த்தோமேயானால் "Zero Hour" என்பதற்கு எந்தவிதமான விதிமுறையும் இல்லை, (மேசையைத் தட்டும் ஒலி,)

திரு, எஸ், திருநாவுக்கரசு: தலைவர் அவர்களே. ......

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் உட்காருங்கள், என்னிடத்திலே கொடுத்த உறுப்பினருக்கு நான் பதில் சொல்ல வேண்டும், (குறுக்கீடு), என்னிடத்திலே அறிவிப்புக் கொடுத்த உறுப்பினருக்கு நான் விளக்கம் சொல்ல வேண்டும், (குறுக்கீடு) அதை நீங்கள் கேட்கவில்லை; உட்காருங்கள்,

(ஆ) உறுப்பினர் திரு, பி, சொக்கலிங்கம். உறுப்பினர்கள் விடுதியிலிருந்து சிலரால் கடத்தப்பட்டு தாக்கப்பட்டதாக வந்த செய்தி குறித்து பேரவைத் தலைவரின் குறிப்புரை,

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு,பி. சொக்கலிங்கம். பேரவை விடுதியிலேயிருந்து கடத்திச் செல்லப்பட்டு. தாக்கப்பட்டதாக வந்த செய்தி குறித்து. திரு, பரிதி இளம்வழுதி விதி 56-ன் கீழ் ஒரு ஒத்திவைப்புத் தீர்மானத்தையும், திரு. ஆர். சிங்காரம், திரு. சி. ஞானசேகரன் ஆகியோர் ஸ்பெஷல் மென்ஷனாக இதை அவையில் எழுப்ப வேண்டுமென்ற ஒரு தீர்மானத்தையும் கேட்டு, என்னிடத்திலே அறிவிப்புக் கொடுத்திருக்கிறார்கள், பொது விவாதத்தில் ஒத்திவைப்புத் தீர்மானம் எடுப்பதில்லை என்பது நியதி. அதனால், ஒத்திவைப்புத் தீர்மானத்திற்கு என்னுடைய அனுமதியை மறுத்திருக்கிறேன். இருந்தாலும். இது உறுப்பினரைப் பற்றிய பிரச்சினை, அதுவும் சட்டமன்ற விடுதியில் நடந்ததாகத் தெரிவித்திருக்கிற காரணத்தினால், சட்டமன்ற விடுதி என்பது வேறு எந்தத் துறையின் கீழ் வராமல். பேரவைத் தலைவருடைய நேரடி நிர்வாகத்திலே வருகிற ஒரு இடமாகும், எனவே. நான் இதற்கு விளக்கம் அளிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். திரு, சொக்கலிங்கம் அவர்கள் தாக்கப்பட்டதாக காவல்துறைக்கு செய்தி கிடைத்து காவல் துறை அதுபற்றி தீவிரப் புலன் விசாரணை செய்து கொண்டிருப்பதாக எனக்குத் தகவல் கொடுத்திருக்கிறார்கள், மேலும். சட்டமன்ற விடுதிக்குள் உறுப்பினர்கள் பெரிதும் பாதுகாப்பாக இருக்கத்தக்க பல்வேறு நடைமுறைகளை நாம் வகுத்துக்

[பேரவைத் தலைவர்] [1992 மார்ச் 16

கொண்டிருக்கிறோம், இன்னும் அதிகமான பாதுகாப்புக்குரிய ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன. குறிப்பாக பார்வையாளர்களை இரவு நேரத்தில் விடுதிக்குள் அனுமதிப்பதில் சிலபல கடுமையான நடைமுறைகளை நடைமுறைப்படுத்த வேண்டுமென்றுகூட நான் ''அவைக் குழு'' வுக்கு ஒரு கோரிக்கையைப் பரிசீலிக்குமாறு எடுத்து வைத்திருக்கிறேன், இன்னும் அதிகமான காவல்துறை பாதுகாப்புக்கும் ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன. திரு, சொக்கலிங்கத்தைப் பொறுத்த மட்டில். அவர் கொடுத்து இருக்கிற புகார் மீது காவல்துறை தீவிரப் புலன் விசாரணை செய்து கொண்டிருக்கிறது, மருத்துவமனையில் அவர் நலமாக இருக்கிறார் என்ற செய்தியும் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. உறுப்பினர்களுடைய பாதுகாப்பைப் பொறுத்த மட்டில் முழு அளவில் அனைவருக்கும் பாதுகாப்பு அளிக்கப்படும் என்பதைத் தெரிவித்து. இந்தப் பிரச்சினையை இத்துடன் விட்டுவிடலாம் என்று தெரிவித்துக் கொள்கிறேன்,

திரு, எஸ், திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. இது போன்ற......

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவர் கொடுத்து இருப்பதிலே யாரையும் குறிப்பிட்டுச் சொல்லவில்லை,

திரு, இளம்வழுதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. இதுபோன்ற சம்பவம் தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருக்கிறது,

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நடைபெற்றுக் கொண்டிருக்கிறது என்பது சரியல்ல: விடுதிக்குள் இது நடந்தது என்பதால். உறுப்பினர்களுக்குப் பாதுகாப்பு வழங்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன் (குறுக்கீடு), நீங்கள் உட்காருங்கள், உங்களுக்கு அனுமதியை மறுத்திருக்கிறேன், நீங்கள் சொன்னதற்கு உங்களுடைய தகவலுக்காக இதை அவையிலே தெரிவித்திருக்கிறேன், இதிலே மேற்கொண்டு விவாதம் வேண்டாம்,

3. வரவு-செலவுத் திட்டம், 1992–93, பொது விவாதம்—தொடர்ச்சி.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 1992–93 ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்டத்தின்மீது மேலும் விவாதம். மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர்.

*திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1992–93 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையின் மீது, எதிர்க்கட்சியின் சார்பில் கருத்துக்களைத்